S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணரால் பரிசீலிக்கப்படும் கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 22 ஞாயிற்றுக்கிழமை [08-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 12

# தொண்டா வருகை திடீர் ஒத்திவைப்பு!

## ஜனவரி 15 இற்கு பின்னரே வருவார்

யாழ்ப்பாணம், டிசம்பர் 8

அமைச்சர் எஸ். தொண்டமானின் வருகை திடீரென ஒத்திவைக்கப்பட்டது. ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னரே அவர் யாழ். வருவதற்கான சாத்தியம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது பயணம் தள்ளிப் போடப்பட்டிருப்பது பற்றி திரு. தொண்டமான், விடுதலைப் புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாகவும் அறிய வந்தது.

பேச்சு நடத்துவதற்காக நாளை பயணம்— 10 ஆம் திகதி — யாழ்ப்பாணம் வரும்படி, விடுதலைப் புலிகள் அமைச்சருக்கு உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுத்துக் கடிதம் அனுப்பியிருக்கும் இவ்வேளையில்— அவரது வருகை ஒத்திப் போடப்பட்டிருப்பதாகக் கொழும்பிலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது.

இது சம்பந்தமாக திரு. தொண்டமான் அனுப்பி வைத்திருக்கும் கடிதம் இன்று அல்லது நாளை யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்[illegible]

(3 ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலை குற்றப்பத்திரம்:

## பிரபா பெயரையும் சேர்க்க முயற்சியாம்!

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தாக்கல் செய்யப்பட உள்ள குற்றப்பத்திரத்தில் விடுதலைப் புலிகள் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானின் பெயருடன் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் பெயரையும் சேர்க்க முயற்சி எடுக்கப்படுவதாக சென்னை வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான குற்றப்பத்திரிகை ஏப்ரல் மாதம் அளவில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-த)

ஜீ. சீ. ஈ. (சா. த) பரீட்சை

## ஐந்து நாட்களுக்குரிய வினாத்தாள்கள் வந்தன

நாளை ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. [சாதாரண] தரப் பரீட்சையின் முதல் ஐந்து நாட்களுக்குரிய வினாத்தாள்கள் நேற்றிரவு வந்து சேர்ந்தன.

நேற்றுக் காலை காங்கேசன்துறைப் பட்டினம் நங்கூரமிட்டிருந்த 'குமாரி' கப்பலில் வைத்து, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளிடமிருந்து யாழ் கல்வி அலுவலக அதிகாரிகள் வினாத் தாள்களைப் பொறுப்பேற்றனர்.

பின்னர் நேற்றிரவு பருத்தித்துறை ஊடாக இந்த வினாத்தாள்கள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன. [உ-3]

## கிராமசேவையாளர் பதவி: நிரப்புவதற்குப் பணிப்பு

கிராமசேவையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல மாவட்ட சபைகளையும் பணித்துள்ளது.

இது தொடர்பாக கடந்த வாரம் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் நேற்று முன்தினம் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குக் கிடைத்திருக்கிறது.

போட்டிப் பரீட்சை மூலம் கிராமசேவையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னர் விதிக்கப்பட்டிருந்த தடை சமயம், அவ்வேலைகளை இடை நிறுத்தி வைக்கும்படி உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல மாவட்ட சபைகளையும் பணித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றிடங்களை நிரப்புவதற்கான வேலைகளை ஆரம்பிக்குமாறு இப்போது சுற்று நிருபம் மூலம் கேட்கப்பட்டிருக்கிறது. (உ-3)

முச்சந்தி முரளி



அஞ்சு நாளோட பரீட்சை பிரேக் அடிச்சிடுமோ?......?

## இருவர் சுளப்பலி

யாழ்ப்பாணம் டிச, 8

பலாலி இராணுவத்தினருடன் நேற்று இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் அருணகிரி (இரத்தினம் சுதலகுமார் - தொண்டைமானாறு) என்ற வீர வேங்கையும், துணைப்படை வீரரான ரவி (சே. செல்வேந்திரன் — பொலிகண்டி) ஆகிய இருவரும் களப்பலியாகினர். (ஓ-165-15)

பலாலியிலிருந்து முன்னேற முயற்சி

# இடைக்காட்டில் உக்கிரச்சண்டை

## இராணுவத் தரப்பில் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 8

பலாலி முகாம் இராணுவத்தினர் நேற்றுக் காலை இடைக்காடு, பத்தமேனி, வளலாய்ப் பகுதிகள் ஊடாக முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் உக்கிரச் சண்டை மூண்டது. வளலாய், இடைக்காடு பகுதிகளில் இராணுவத்தினரை வழிமறித்து, விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தி வருகிறார்கள்.

இந்த மோதல்களில் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினருக்கு உதவியாக விமானங்களும் ஹெலிகளும் சரமாரியாக இடைவிடாது தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் படையினர் நகர முயன்றபோது அடுத்து வெடித்த மோதல் காலை 10.30 மணி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் இடம்பெயர்வு

அச்சுவேலி, டிச. 8

பலாலி இராணுவத்தினருடன் நேற்று மோதல் மூண்டதை அடுத்து அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், வரணி, கதிரிப்பாய், தம்பாலை, தென்மூலை பகுதியில் இருந்து நேற்று ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்தன.

இடம்பெயர்ந்தவர்கள் ஆவரங்கால் சிவன்கோவில், சந்தை, இராமலிங்க நடராசா வித்தியாலயம், மகாஜன வித்தியாலயம், புத்தூர் கிராமச

(3 ஆம் பக்கம் பார்க்க)

# பொலீஸாரின் உறவினர் வருவதும் தள்ளிவைப்பு!

## கூட்டுப்படைத் தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிச.8

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள பொலிஸார் மற்றும் படையினரை பார்வையிடுவதற்காக அவர்களது உறவினர்கள் யாழ்ப்பாணத்திற்கு இவ்வாரம் மேற்கொள்ள இருந்த விஜயம் கூட்டுப்படைத் தலைமையகத்தின் திடீர் உத்தரவை அடுத்துத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

வட பிரதேசத்தில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும்—

அங்குள்ள பாதுகாப்புச் சூழ்நிலை காரணமாகவும்—

இம்மாத நடுப்பகுதியில் வடக்கே விஜயம் செய்யவிருந்த சிங்களக் குடும்பங்களின் பயணம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக கூட்டுப்படைத் தலைமையகம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு அறிவித்திருக்கிறது:

(3 ஆம் பக்கம் பார்க்க)

# உடுப்பிட்டியில் குண்டுவீச்சு! வியாபாரி உடல்சிதறிப் பலி!!

வடமராட்சியின் — உடுப்பிட்டியில் நேற்று நண்பகல் 12.10 மணியளவில் இரு மெ ம்மரான் குண்டுவீச்சுக் களை நடத்தின. இதில் வியாபாரி ஒருவர் உடல் சிதறி அந்த இடத்திலேயே பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

குண்டுவீச்சினால் ஐந்து வீடுகள், வாசிகசாலை, செஞ்சிலுவைச் சங்கத்தின் உடுப்பிட்டிக் கிளை, மரம் அரியும் தொழிற்சாலை ஆகியன சேதமடைந்தன.

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த கந்தவனம் இராசதுரை (68 வயது) என்பவரே இறந்தவர் ஆவார். உடுப்பிட்டியைச் சேர்ந்த முருகன் [80 வயது] என்று அழைக்கப்படும் வயோதிபரே படுகாயமடைந்தார். (ஓ 155-15)

### கைவிடப்பட்ட பூதவுடல்!

இடைக்காடு பகுதியில் நேற்று பதற்றம் ஏற்பட்டதை அடுத்து, அங்கு வீடு ஒன்றில் ஈமக்கிரியைக்காக வைக்கப்பட்டிருந்த பூதவுடலையும் விட்டுவிட்டு உறவினர்கள் ஓடிச் சென்றுவிட்டனர்.

நோய்வாய்ப்பட்டிருந்த தம்பிஐயா (70 வயது) என்பவர் நேற்று முன்தினம் இயற்கை மரணம் எய்தியிருந்தார். அவரது பூதவுடலை வைபெடுத்த உறவினர்கள் [illegible] வந்துள்ளனர்.

## காங்கேசன் துறைமுகத்தில் பாரிய கடற்படைக் கப்பல்

யாழ்ப்பாணம், டிச 8

காங்கேசன்துறைத் கடற் பகுதியில் பாரிய கடற்படைக் கப்பல் ஒன்று நேற்று நங்கூரமிட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்ததாக தெரிய வந்தது.

இதேவேளை — மேலும் பல சிறிய கடற்படைக் கப்பல்களும் காங்கேசன் துறைமுகப் பகுதியில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# பொதுமக்கள் அறுவர் பலி!

அச்சுவேலி, டிச. 8

அச்சுவேலியில் கதிரிப்பாய், இடைக்காடு, பத்தமேனி ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல் களினால் ஆறுபேரும் மேற்பட்ட பொதுமக்கள் மரணமாயினர். பலர் காயமடைந்தனர்: உடைமைகள் பலவும் நாசமாகின.

அச்சுவேலி — தொண்டமானாறு வீதி கதிரிப்பாயில், இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருந்த மக்கள் மீது பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சினால் மூன்று பேரும், கண்டபடி நடத்தப்பட்ட ஷெல் வீச்சினால் இன்னும் மூன்று பேரும் பலியாகினர்.

இந்தப் பகுதியில் ஹெலிகளும் கண்மூடித்தனமாகத் தாக்குதல்களை நடத்தின:

இன்னாசி நாகமுத்து (80 வயது)— கதிரிப்பாய், வேலன் மார்க்கண்டு (55 வயது)— தம்பாலை, பொன்

(3 ஆம் பக்கம் பார்க்க)

ஜி. சீ. ஈ. (சா.த) பரீட்சை

## அச்சுவேலிப் பகுதி மாணவரின் கதிஎன்ன?

அச்சுவேலி, டிச 8

அச்சுவேலி — இடைக்காடு பகுதியில் உள்ள பரீட்சை நிலையங்களில் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அச்சமின்றி பரீட்சை எழுத வசதிப் பாதுகாப்பு வசதி கிடைக்குமா?

இவ்வாறு அப்பகுதி மாணவர்களின் பெற்றோர் கவலைப்படுகின்றனர்.

நாளை ஆரம்பமாகவிருக்கும் இப்பரீட்சைக்கு அச்சுவேலி - இடைக்காடு பாடசாலை மாணவர்களும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றுவதற்காக எழு பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்றுத் தொடக்கம் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இவர்களும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பீற்றாட் விதைகள் (200 கிராம் டின்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். [18937]

ஆங்கில உணர்கிகள், செலவில் மற்றும் கம்பியூட்டர் புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு: ஞாயிறு காலை 10-00 மணி முதல் 12-00 மணி வரை பார்வையிடலாம். 25, மார்ட்டின் லேன், [திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில்] யாழ்ப்பாணம். (19003)

## தேவை

நல்ல நிலையிலுள்ள மரம் தேவை. விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். சி. ரகுவரன், 125, கோவில் வீதி, நல்லூர். [18940]

## தவறிவிட்டது

நவரத்தினம் இராஜாவதி ஆகிய எனது [626742742V] இலக்கமுடைய அடையாள அட்டை 2-12-91 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 574/1, சம்பந்தன் கிளினிக் ஆஸ்பத்திரி வீதியில் தொடர்பு கொள்ளவும். [19001]

## கிரக சேர்க்கை

1-1-92 முதல் 10-2-92 வரை தனுராசியில் செவ்வாய் மற்றும் யூரேனஸ், நெப்ரியூன், புளூட்டோ ராகுக்களின் கிரகசேர்க்கைகள் விபர முனிவர் சுபாரிகைவயைப் பெறுவதால் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்; 1992 ஆம் ஆண்டு சமநிலையும், செவ்வாய் மற்றும் ரூபா 7/- ரகுநாதன் பதிப்பகம் யாழ்ப்பாணம். (Prof. சத்தியதாஸன்) [18949]

## அடுப்பில்லாச் சமையல் நூல்

''அடுப்பில்லாச் சமையல் செய்முறைக் குறிப்பு'' என்ற நூலை இலவசமாகப் பெற்றுக்கொள்ள ரூபா 2/- பெறுமதியான அஞ்சல் முத்திரை அனுப்பி வைக்கவும். மிக்கவைற் த. பெ. இல 77, யாழ்ப்பாணம். [சி/0985]

---

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1991 - 12 - 23 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர் (கணனி விஞ்ஞானம்)
2. தற்காலிக போதனாசிரியர் (கணனி விஞ்ஞானம்)

சம்பள அளவுத் திட்டம்:

1. தற்காலிக உதவி விரிவுரையாளர் ரூபா 3,900/- (மாதமொன்றுக்கு)
2. தற்காலிக போதனாசிரியர் ரூபா 3 250/- (மாதமொன்றுக்கு)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தாபனக் கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச.மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

– பதிவாளர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991 - 12 - 04

(சி-0984)

---

உ

சுதுமலை

# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபை அறிவித்தல்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதான ஆலயத்தினதும் உள்புற, வெளி புறச் சுற்றுப் பிரகார ஆலயங்களினதும் (பரிவார ஆலயங்கள்) திருப்பணிகளுக்குப் பணமாகவோ அல்லது பொருளாகவோ நன்கொடைகள் திரட்டுவதற்கு மேற்படி தர்மகர்த்தா சபை, எவருக்கும் அதிகாரம் வழங்கவில்லை என்பதை இத்தால் சகல அம்பாள் அடியார்களுக்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.

பணமாகவோ அன்றி பொருளாகவோ திருப்பணிகளுக்கு நன்கொடை வழங்க விரும்பும் அடியார்கள், தர்மகர்த்தா சபைப் பொருளாளரிடம் வழங்கி பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளவும்.

தர்மகர்த்தா சபை,
சுதுமலை
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்.

[4424]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## 92 Dec ஆண்டு 6, 7, 8, 9 O/L EVENING CLASSES

புதிய பிரிவுகள் [4-00 — 6 00]

ஆரம்பம்: 09-12-1991

முக்கிய குறிப்பு:

1. O/L 92 Dec. Day Classes ஆரம்பமாக உள்ளன. பெயர்களை முன் கூட்டிய பதிவு செய்துகொள்ளவும்.
2. கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தப்படும்:

(சி/1055)

---

# பாடசாலை விடுமுறை

கொழும்பு டிச 8

மூன்றாம் தவணை விடுமுறைக்காக, அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் நேற்று மூடப்பட்டன;

அடுத்த ஆண்டுக்கான முதலாம் தவணைக்காக ஜனவரி 6 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும்.

(இ-த)

---

# O/L

அனைத்துப் பாடங்களுக்குமான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**BOND கல்வி நிறுவனம்**

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1052)

---

# யா/வேம்படி மகளிர் கல்லூரி

## 1991- ஆண்டு 5 புலமைப் பரிசில் அடிப்படையில் ஆண்டு 7 அனுமதி - 1992.

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு மட்டும் யா/வேம்படி மகளிர் கல்லூரியில் 1992 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டு 7 வகுப்பில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைக் கொண்டுவரும்போது புலமைப் பரிசில் பரீட்சை எடுத்த பாடசாலை அதிபரிடமிருந்து மாணவி புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளி, மாணவியின் சுட்டிலக்கம் என்பவற்றையும் உறுதிப்படுத்திக் கொண்டு வரும்படி வேண்டப்படுகிறீர்கள்.

மேற்படி மாணவர்கள் பாடசாலை அலுவலகத்தில் 23 - 12 - 1991 க்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஒப்படைக்கவும்.

–அதிபர்.

(சி/1057)

---

வெல்லுங்கள்! வெல்லுங்கள்!! விரையுங்கள்!!!
உங்கள் சிந்தனைக்கும், கலைத்திறனுக்கும் சவால்!!!

# யாழ். றோட்டரிக் கழகம்

நடத்தும்

## போலியோ (இளம்பிள்ளைவாதம்) தடுப்பு சுவரொட்டி (போஸ்டர்) / சுலோகப் போட்டிகள்

போலியோ நோயின் ஆபத்தை விளக்கவும், அது குறித்து மக்கள், விசேடமாக இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வைத் தூண்டவும்,

**உதயன் வெளியீட்டகத்தின் ஆதரவுடன்**

இப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

சுவரொட்டிகளும், சுலோகங்களும் –

போலியோ தாக்குவதால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக் காட்டுவதுடன் — நோய் பிள்ளைகளைத் தாக்காது தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு மக்களைத் தூண்டும் கருத்துக்களையும் வெளிக்கொணர வேண்டும்.

★ பரிசுகள் சுவரொட்டி, சுலோகம் ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் தனித்தனியாக வழங்கப்படும்.

★ முதற் பரிசு: ரூ. 1000.00
★ இரண்டாவது பரிசு: ரூ. 750.00
★ மூன்றாவது பரிசு: ரூ. 500.00
★ பத்து ஆறுதல் பரிசில்களும் உண்டு.

**முடிவு திகதி:- 31 - 12 - 1991**

போட்டி விதிகள்:

01. 15 தொடக்கம் 25 வரையிலான வயதுடைய இருபாலாரும் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்; (பரிசுக்காக தேர்ந்தெடுக்கப்படுவோர் தனது வயதை நிரூபிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.)
02. ஒருவர் இரு பிரிவு போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம். எனினும் ஒரு பிரிவில் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்ப வேண்டும்.
03. பரிசுக்காக தேர்ந்தெடுக்கப்படுவோர் ஆக்கம் தமது சொந்தப் படைப்பு என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
04. விண்ணப்பங்கள் யாவும் செயலாளர், யாழ். றோட்டரிக் கழகம், 5/2, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
05. போட்டி தொடர்பாக எவ்வித கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது. பரிசு பெற்றவர்களின் விபரம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.
06. போட்டி தொடர்பான சகல விடயங்களிலும் யாழ். றோட்டரிக் கழகத்தின் தீர்ப்பே முடிவானது.

உதயன் பணிமனை, மற்றும் ஷப்ற நிதி நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

செயலாளர்,
யாழ். றோட்டரிக் கழகம்.
யாழ்ப்பாணம்.

(ச 107)

---

# 75 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 13 — 03 — 1973

தாயக மண்ணில்: 24 — 09 — 1991



## ஆனந்தன் சியாமலாதேவி (யசி)

தமிழீழ தாகம் கொண்ட தாரகையே நீ
தலைவனை மாற்றி சுட்டெரித்து விட்டாய்
சோரிலே பகைவர்தனை விரட்டியடித்து விட்டாய்
மங்கைப்புகமுடனே – யசி எனப் பெயர் பெற்றாய்
மணம் வீசி மறத்தமிழர் மனதினிலே –
வாடாமலரானாய்.
தஞ்சிநமே உன் நினைவு!
துலங்கிடுமோ கூன் கனவு!
அஞ்சியே ஓடுகிறார் பார் அந்நியர் அவலத்துடன்
அங்கே நாம் கண்டோம் கண்மணியே
உன் கமலமுகம் – இங்கே எம் கண்ணில்
மழலை கூட சுரக்குதம்மா? தப்பாக்கி
உன் கனவை நிறைநாட்ட.

தாய், சகோதரர்,
மைத்துனர், உறவினர்கள்.

அரசடி,
தொண்டைமானாறு.

(4418)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## 1992 ஆம் ஆண்டிற்கான 11ஆம், 10ஆம், 9ஆம், 8ஆம், 7ஆம், 6ஆம் ஆண்டு வகுப்புகள்

**ஆரம்பம்: 09 - 12 - 1991 (திங்கள்)**

மாலை 4-00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. J.R. சூரி |
| கணிதம் | — | திரு ஜெகன் |
| ஆங்கிலம் | — | திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | — | திரு. கோப்பாய் சிவம் |
| சமூகக்கல்வி | — | திரு. கோபி |
| வர்த்தகம் | — | திரு. கருணாகரன் |
| சமயம் | — | திரு. சங்கர் |

மு. கு: O/L – 92, DAY CLASS க்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

(சி-1034)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அருகதை அடைவதற்கு...!

முழுக்க முழுக்க உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தைக் கொண்டு அடுத்த வருடத்திற்குரிய நாட்காட்டிகளை அச்சிட்டு வெளியிட்டுள்ளது தமிழீழ ஆய்வு நிறுவனம்.

அந்த நாட்காட்டியை அச்சிடுவதற்குத் தேவையான "புளொக்"குகள் கூட உள்ளூரில் மரத்தில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தமாக, எமது மக்களின் முடிவைக் கைத்தொழில் வினைத்திறனை தமிழீழ ஆய்வு நிறுவனம் வெளியிட்ட நாட்காட்டி எடுத்தியம்புகிறது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் வெற்றி காண்பதற்கு, சுய பொருளாதார வளர்ச்சியே அத்திவாரம். அந்த அத்திவாரம் உரிய எனப் பரிமாணங்களில் கட்டப்படாவிட்டால், அரசியல் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது கஷ்டம் அரசியல் அபிலாஷைகளை எய்துவதும் கடினம்.

பொருளாதாரத் துறையில் கை வைத்தால் தமிழர்களை இலகுவாகவும், விரைவாகவும் இறுக்கிப் பிடிக்கலாம். நெருக்கி வதைக்கலாம் என்ற எண்ணத்துடனேயே அரசாங்கப் பொருளாதாரத் தடைகளை கொண்டு வந்திருக்கிறது. இதனை தமிழர்கள் என்றும் மறக்கக் கூடாது.

ஆகையால், பொருளாதாரத் தடையை ஒரு சவாலாகக் கொண்டு, தமிழர்கள் தமது பொருளாதாரத்தைப் பலப்படுத்திக் கொள்வது, சுதேச உற்பத்திகளை அதிகரிப்பது அத்தியாவசியம். சகல பொருள்களுக்கும் கொழும்பையே நம்பி இருக்கும் நிலையை இல்லாமற் செய்ய வேண்டும். அந்தக் குறிக்கோளுடன் விவசாயம், கடற்றொழில், பனைத் தொழில், கைத்தொழில் ஆகிய துறைகளில் விளைவுகளும், உற்பத்திகளும் பெருக்கப்பட வேண்டும்.

இன்றைக்கு உள்ள நிலை தற்காலிகமானது எனவோ இடைப்பட்டது என்றோ எண்ணி அதனைச் சமாளிப்பதற்கான அல்லது மாற்றீடு செய்வதற்கான எண்ணம் இருத்தலாகாது. இதுவே தமிழர்களின் நிரந்தர நிலை அல்லது இயல்பு நிலையாகி விட்டது என்ற கருத்துடன் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் பணி தொடர வேண்டும்.

அரசியல் மற்றும் வாழ்க்கை வசதிகளில் முன்னேற்றம் உண்டாகி, மாற்றம் ஏற்பட்டாலும் கூட, பொருளாதாரம் மற்றும் உற்பத்தித் துறை வளர்ச்சிக்கான பணிகள் இப்போதுள்ள வேகத்திலேயே முடுக்கிவிடப்பட வேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலும் எத்தகைய பின்னணியிலும் வேறு எந்தத் தேவைகளையும் விட, பொருளாதாரத் தேவையில் — உற்பத்தித் துறையில் — எங்கள் கையையும், மூலவளங்களையும், மதிநுட்பத்தையும் நாம் நம்பி இருக்க வேண்டும். அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாக — அரசியல் சூழல் மாறியதும் கொழும்புப் பொருள்களை - வெளிநாட்டுப் பொருள்களை - அந்நிய உற்பத்திகளை நம்பி எமது சொந்தப் பொருளாதார வளர்ச்சிப் பணியை கைவிட்டு விடக் கூடாது.

தமிழர்களின் பொருளாதாரம் தொடர்ச்சியாக வளர்ச்சி கண்டு உறுதி நிலை கண்டால் மட்டுமே, நம் சுதந்திர மக்களாக மாறுவதற்கு அருகதை - பாத்தியதை - அடைவோம்.

# ஒரு பங்கில் சிவில் நிர்வாகம் வந்தால் 3 பங்கு ராணுவ கட்டுப்பாட்டில் வரும்

## வவுனியாவில் ஜனாதிபதி பிரேமதாஸா உரை

வவுனியா, டிச. 8

அரசாங்க அதிகாரிகள் 80 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பகுதியில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு செய்யின், பாதுகாப்புப் படையினர் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை 250 சதுர மைல்களுக்கு விஸ்தரிப்பதற்குத் தயாராக உள்ளனர்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ வவுனியாவில் வைத்து நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா நகரில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் சேவைகளை நேரில் பார்வையிடுவதற்காகவே அவர் வவுனியா வந்தார்.

ஜனாதிபதியுடன் பல அமைச்சர்களும், துணை அமைச்சர்களும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, கூட்டுப் படைகள் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, வடக்கு - கிழக்கு ஆளுநர் நளின் செனிவிரத்ன ஆகியோரும் வந்திருந்தனர்.

சிங்கள மகாவித்தியாலயத்தில் நடந்த வைபவத்தில் ஜனாதிபதி உரையாற்றினார். அவர் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்குப் பகுதியில் மீண்டும் அமைதியை ஏற்படுத்துவதற்கும், நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கும் சகல கட்சிகளும், சமூகங்களும் முன் வர வேண்டும். சர்வகட்சி மாநாடு அல்லது பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொள்வதன் மூலம் இதனை அடைய முடியும்.

வடக்கிலும், கிழக்கிலும் யுத்தத்தில் வெற்றி கொள்வது என்பதன் உண்மையான பொருள், வடக்கு — கிழக்குப் பகுதியில் வாழும் மக்களுக்கு வெற்றியை மீண்டும் கொண்டு வருவது என்பதே ஆகும்.

அப்பகுதியில் போராடுபவர்கள் பயங்கரவாதிகளாக இருப்பினும், சொந்த நாட்டு மக்களுடன் போராட வேண்டி இருப்பது குறித்து நான் வருத்தம் அடைகின்றேன்.

வடக்கு - கிழக்குப் பகுதியில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் மீண்டும் ஏற்படுத்துவதற்காக, சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்வருமாறு விடுதலைப் புலிகளை நான் எப்போதுமே கேட்டு வந்திருக்கிறேன்.

கலந்தாலோசனை, சமரசம், கருத்தொற்றுமை ஆகியவற்றின் மூலமே நம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

கடந்த 17 ஆண்டுகளாக நாம் தேவையற்ற யுத்தத்தில் ஈடுபட்டு வருகிறோம். 1956 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பின்பற்றப்பட்ட வேலைவாய்ப்பு, மொழிக் கொள்கைகள் காரணமாகவே வடக்கு கிழக்குப் பகுதிகளில் அதிருப்தியான நிலைமை ஏற்பட்டது.

வடக்கு-கிழக்குப் பகுதியில் வழமையான சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதே ஆயுதப்படைகளினதும், பொலிஸாரினதும் நோக்கமாகும்.

ஊர்காவற்றுறையை மையமாகக் கொண்டு விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அமைச்சரவைத் துணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. சமூகநலத்துறை அமைச்சர் பி. தயாரத்தின, துணை அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் ஆகியோரின் பணிப்பின் பேரில் வவுனியாவில் ஒருங்கிணைக்கப்பட்ட வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது — என்று ஜனாதிபதி சொன்னார். (அ-எ-த)

### பொலிஸாரின்-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் உறவினர்கள் எப்போது வடக்கே செல்லலாம் என்பது குறித்து அரசு பின்னர் அறிவிக்கும் என்றும் செஞ்சிலுவைக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுப்படைத் தலைமையகத்தின் அறிவிப்பை அடுத்து படையினரின் உறவினர்கள் மேற்கொள்ளவிருந்த விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கும் பத்திரிகை அறிக்கை ஒன்றைச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு நேற்று மாலை கொழும்பில் வெளியிட்டிருந்ததாகவும் அறியவந்தது. (உ-3)

### தொண்டா-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளும் "சார்க்" மாநாட்டைக் காரணம் காட்டி தமது விஜயத்தை ஒத்திப் போட்டிருப்பதாக அமைச்சர் திரு. தொண்டமான் குறிப்பிட்டிருக்கிறார் என்றும் —

அனேகமாக ஜனவரி நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு தாம் விஜயம் செய்யக்கூடிய சாத்தியம் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார் என்றும் — அறியவந்தது.

ஆனாலும் ஜனவரி நடுப்பகுதியில் தாம் நிச்சயம் யாழ்ப்பாணம் வருவார் என்பது குறித்து அந்தக்கடிதத்தில் அவர் உறுதிபடத் தெரிவிக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது. (உ-3)

### உருவப்படம் திரை நீக்கம்

யாழ்ப்பாணம், டிச. 8

முன்னாள் திட்டப் பணிப்பாளரும், உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியுமான காலஞ்சென்ற இரு. திரு. வே. நடேசபிள்ளையை நினைவு கூரும் முகமாக நாளை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். செயலகத்தில் அவரது உருவப்படம் திரைநீக்கம் செய்து வைப்பதுடன் பொதுக்கூட்டமும் இடம் பெறும். (ந)

### யூரியா விலை குறைப்பு

கொழும்பு, டிச. 8

யூரியா உரத்தின் விலையை இலங்கை உரக் கூட்டுத்தாபனம் உடனடியாகக் குறைத்துள்ளது.

இந்த விலைக் குறைப்பின் விளைவாக கொழும்பில் பாவனையாளர்கள் 50 கிலோ எடையுள்ள யூரியா பை ஒன்றை 485 ரூபாவுக்கு வாங்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

அதே சமயம் வடபகுதிக்கு யூரியா எடுத்து வருவதற்கான தடை தொடர்ந்து அமுலில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. [இ-ந]

### கடன் பெற்றோருக்கு சலுகை

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ். தேசிய வீடமைப்பு திணைக்களத்தில் வீடமைப்புக் கடன் பெற்றவர்களுக்கு, அவர்கள் மீளச் செலுத்த வேண்டிய முழுத்தொகையையும் ஒரே தடவையில் செலுத்துமிடத்து, பத்து வீதம் கழிவு வழங்கப்படுமென திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தவணை தப்பிய சிறவீடு களுக்கு தண்டப்பணம் அறவிடப்படமாட்டாதெனவும் - இச்சலுகைகள் இம்மாதம் 31 ஆம் திகதி வரை மட்டுமே [illegible]

### விசுவமடுப் யானைகள் பிரகிருதியின் அட்டகாசம்

யாழ்ப்பாணம், டிச. 8

விசுவமடு, தர்மபுரம் பகுதிகளில் யானையின் அட்டகாசம் மிக அதிகரித்துள்ளது.

யானைகள் திடீர் திடீரென தோன்றி மக்களுக்கு தொல்லை புரிந்து வருகின்றன; பயன்தரு மரங்கள் பலவற்றையும் அவை நாசமாக்கி வருகின்றன.

இதனால் இப்பகுதி மக்கள் பெரும் அச்சத்துடன் காலத்தைக் கழிக்கின்றனர்.

நேற்று இப்பகுதியில் 12 வயது மகனுடன் சென்ற ஒருவர் யானையால் தாக்கி வீசப்பட்டதில் படுகாயமடைந்தார். அவரது மகன் பக்கத்திலிருந்து குதித்து ஓடித் தப்பிக்கொண்டார்.

இச்சம்பவத்தில் விசுவமடு றெட்பானாவைச் சேர்ந்த சோமசுந்தரம் மாணிக்கம் (வயது 43) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-15)

# எதிர்க்கட்சி கூட்டு முன்னணி அமைப்பதில் இழுபறி நிலை!

கொழும்பு, டிச. 8

அரசுக்கு எதிரான கூட்டு முன்னணி ஒன்றை அமைக்கும் எதிர்க்கட்சிகளின் முயற்சி இழுபறி நிலையில் இருப்பதற்கு — அக்கட்சிகளுக்கு இடையே இனப்பிரச்சினை தொடர்பாக, தெளிவான இணக்க நிலை ஏற்படாததும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

இனப்பிரச்சினை தொடர்பாக தமது நிலை என்ன என்பதையோ, அந்தப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தமது ஆலோசனைகளையோ எதிர்க்கட்சிகள் எவையும் இன்னும் வெளிப்படுத்தவில்லை.

அரசு தரப்பில் தீர்வு தொடர்பாகத் திட்டவட்டமான யோசனை ஒன்று முன்வைக்கப்படும் வரை எதிர்க்கட்சிகள் இவ்விஷயத்தில் தமது வாயைத் திறக்க மாட்டா என்பது முன்னரே தெரிந்ததே.

ஆனால் இக்கட்சிகள் தமக்குள் கூட்டணி அமைக்கும் போது ஒரு பொதுவான கொள்கையை அறிவிக்க வேண்டிய தேவை ஏற்படும். இதனால் ஒவ்வொரு கட்சியும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயமும் உருவாகும்.

ஆனால் இது விடயத்தில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து மௌனம் சாதிப்பதால் கூட்டணி அமைவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

எதிரணிக் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு— லலித்—காமினி குழுவினரின் வழக்குத் தீர்ப்புக்காகக் காத்திருப்பதாக இவ்வளவு காலமும் சொல்லப்பட்டு வந்தது.

ஆனால் இப்போது தீர்ப்பு வெளியாகிவிட்டதால் கூட்டணி அமைப்பது தொடர்பாக இனிமேலும் சாக்குப் போக்கு சொல்ல முடியாத சங்கட நிலை எதிர்க்கட்சிகள் மத்தியில் தோன்றியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-10)

### பொதுமக்கள்.-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் செல்லையா (80 வயது) தம்பாலை, திருமதி செல்லத்துரை (85 வயது)— தம்பாலை மற்றும் வளலாய் சக்கவிப் பகுதியில் ஓர் ஆண் ஒரு பெண் ஆகியோரே நேற்று உயிரிழந்தவர்கள் ஆவர்.

சக்கவிப்பகுதியில் வீதியில் சடலமாகக் காணப்பட்ட ஆணினதும், பெண்ணினதும் பெயர், விபரம் தெரியவரவில்லை.

சந்நிதிவீதி தீர்த்தக்குளம் என்ற இடத்தில் ஒரே இடத்தில் மூன்று குண்டுகள் வீசப்பட்டன. இதனால் அங்கிருந்த பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன. அவற்றில் சில தகர்ந்தன.

அச்சுவேலி பத்திரித்துறை வீதி, ஆவரங்கால் வல்லை வீதி ஆகியவற்றில் சென்ற மினிபஸ்கள், மற்றும் வாகனங்களை நோக்கியும் ஹெலிகள் தாக்குதலை மேற்கொண்டன.

பரவலாக பல இடங்களிலும் குண்டுகள் வீசப்பட்டதில் வீடுகள், கட்டடங்கள் பலசேதமடைந்துள்ளன கால்நடைகள் பலவும் இறந்துள்ளன. பெருமளவு உடைமைகள் நாசமாகியுள்ளன.

#### காயமடைந்தோர்

இதே வேளையில்—

ஷெல், பொம்மர் தாக்குதல்களினாலும், துப்பாக்கிச் சூட்டினாலும் பலர் காயமடைந்தனர். அவர்களில் சிலரது பெயர், விவரம் வருமாறு:

தம்பாலையைச் சேர்ந்த பொன்னர் வடிவேலு (74 வயது). பொன்னு செல்லத்துரை. இடைக்காட்டைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை நடராசா (47 வயது), சிறுமுகம் சந்திரபாமா (49 வயது). சுந்தரமூர்த்தி சரஸ்வதி (30 வயது). சிறிப்பலையைச் சேர்ந்த நா. ஜெயந்திரராசா (23 வயது), முதலி சின்னத்துரை (46 வயது). பெரியளர் முத்துலிங்கம் (55வயது) வளலாயைச் சேர்ந்த திருமதி செல்லத்தம்பி ஆகியோரும் மற்றும் சிலரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பலர் யாழ். ஆஸ்பத்திரியில் [illegible]ளனர். (ஓ 15 5-11 165)

### இன்று

யாழ்ப்பாணம், டிச. 8

நல்லூர் பிரதேசசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் லெப். சேனன் சரஞர்பகர்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும் நிகழ்ச்சிக் கூட்டமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஓ 5)

### இடைக்காட்டில்-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை உக்கிரமாக இடம்பெற்றது. பின்னர் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை ஆங்காங்கே மோதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் முன்னேறிய சமயம் பலமாக — இடைவிடாது—ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. விமானங்களும், ஹெலிகளும் கண்மூடித்தனமாக—இலக்கு ஏதுமின்றி தாக்குதல்களை நடத்தின.

இந்தத் தாக்குதல்களின் உதவியுடன் பெருந்த எடுப்பில் படையினர், வளலாய், பத்தமேனி, இடைக்காடு பகுதிகளை நோக்கி சமீபத்தளவு முன்னேறி வந்தனர்.

#### பெரும் பதற்றம்

அதிகாலை வேளையிலேயே படையினரின் தாக்குதல்கள் ஆரம்பித்துவிட்டதால், மக்கள் பதற்றம் அடைந்து, பெரும் கஷ்டங்களையும், இன்னல்களையும், அனுபவித்தனர். (ஓ-15-11-165-51)

### 3 படையினர் காயம்

கொழும்பு, டிச. 8

திருகோணமலை மாவட்டம், கட்டைபறிச்சான் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப்படையினருக்கும் இடையே இடம்பெற்ற மோதல் ஒன்றில் மூன்று படையினர் காயமடைந்தனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

### புலிகளின் முகாமை கைப்பற்றினராம்

அம்பாறை—மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை பாதுகாப்புப் படையினர் நேற்றுக் காலை கைப்பற்றினர் என்று பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரங்காட்டி இலங்கை வானொலி அறிவித்தது.

அந்த நடவடிக்கையின் போது நான்கு போராளிகள் கொல்லப்பட்டனர் என்று கூறிய பாதுகாப்பு வட்டாரங்கள், படையினர் தரப்பில் உயிரிழப்பு ஏதும் இருக்கவில்லை என்றும் கூறின.

### பீரங்கி தாக்குதல்

கீரிமலைக் கடற்பகுதியில் இருந்து படையினர் நேற்று முன்தினம் குடியிருப்புப் பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

பீரங்கிக் குண்டுகள் கொல்லங்கலட்டிப் பகுதியில்விழுந்து வெடித்தன.

இதேசமயம்—

நேற்று நண்பகல் கட்டுவன் முகாமில் இருந்து ஏழாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (ஓ-68)

### அச்சுவேலி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது இந்த நிலைமைகளில் பரீட்சை எழுத முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (உ-11)

### மக்கள்-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோடு, மெதடிஸ்த வைத்தியசாலை, மற்றும் ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி அச்சுவேலி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் அகதிகளாகத் தங்கியுள்ளனர். (ஓ-11-15-165)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

